BSNL ஊழியர் சங்கம்

தமிழ் மாநிலம்

***சுற்றறிக்கை எண்*: 125** **தேதி:-19.01.2019**

காலம் கடந்து போவதால் வேலை நிறுத்தம் தவிர்க்க முடியாது
AUAB முடிவு

அன்புள்ள தோழர்களே,

தோழர் சந்தேஸ்வர் சிங் GS NFTE & AUAB தலைவர் அவர்களின் தலைமையில் 16.01.2019 அன்று நடைபெற்ற AUAB கூட்டத்தில் வந்திருந்தவர்களை AUAB அமைப்பாளரும் BSNL ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான தோழர் P.அபிமன்யு அவர்கள் வரவேற்று அன்றைய கூட்டத்தின் ஆய்படு பொருட்கள் தொடர்பாக எடுத்துரைத்தார். BSNLEU, NFTE, SNEA, AIBSNLEA, BSNL MS மற்றும் BSNL OA ஆகிய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். AUAB முன்வைத்திருந்த கோரிக்கைகளின் தீர்வில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. 4G அலைக்கற்றை ஒதுக்கீடு மற்றும் வாங்கும் ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்களிப்பு ஆகிய விஷயங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது. ஆனால் 3வது ஊதிய மாற்றம் மற்றும் ஓய்வூதிய மாற்றம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் நிகழவில்லை என்றும் அந்தக் கூட்டம் முடிவுக்கு வந்தது. கோரிக்கைகளின் தீர்விற்கான அவகாசம் பிப்ரவரி 2019 வரை மட்டுமே உள்ளது என்றும், பாராளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு மார்ச் மாதத்தில் எந்த நேரத்திலும் வரலாம் என்றும் அந்தக் கூட்டம் அனுமானத்திற்கு வந்தது. தேர்தல் அறிவிக்கப்பட்டது என்றால், நடத்தை விதிகள் அமலுக்கு வந்துவிடும்; அதன் பின்னர் எந்த கோரிக்கையும் தீர்வு காண முடியாது. மேலே கூறப்பட்ட காரணங்களால், வேலை நிறுத்தத்திற்கான அறைகூவல் விட வேண்டிய கட்டாயத்தில் AUAB உள்ளது என்கின்ற தகவலை அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மேலும், தொலை தொடர்பு துறையின் கூடுதல் செயலாளரை நேரடியாக சந்தித்து இதனை தெரிவிக்க வேண்டும் என்றும் அந்தக் கூட்டம் முடிவுக்கு வந்தது.

இந்த முடிவின் அடிப்படையில் 17.01.2019 அன்று தோழர் AUAB அமைப்பாளரும் BSNL ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான தோழர் P.அபிமன்யு, தோழர் சந்தேஸ்வர் சிங் GS NFTE & AUAB தலைவர், தோழர் K.செபாஸ்டின் GS SNEA, தோழர் பிரகலாத் ராய் GS AIBSNLEA ஆகியோர் தொலை தொடர்பு துறையின் கூடுதல் செயலாளர் திரு அன்ஷூ பிரகாஷ் அவர்களை சந்திதனர். 16.01.2019 அன்று நடைபெற்ற AUAB கூட்டத்தின் முடிவுகளை கூடுதல் செயலாளரிடம் தெரிவித்தனர். 3வது ஊதிய மாற்றத்தில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லாதது ஊழியர்கள் மத்தியில் கடுமையான அதிருப்தி நிலவுவதையும் தெரிவித்தனர். பாராளுமன்ற தேர்தலுக்கு அதிக காலம் இல்லையென்ற காரணத்தால், AUAB வேலை நிறுத்த அறைகூவல் விட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது

என்ற தகவலையும் தெரிவித்தனர். 3வது ஊதிய மாற்றம் தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கக் கூடிய வகையில் அடுத்த வாரத்தில் AUABயுடன் பேச்சு வார்த்தை நடைபெறும் என தொலை தொடர்பு துறையின் கூடுதல் செயலாளர் தெரிவித்தார்.

மேலும் 16.01.2019 அன்று நடைபெற்ற AUAB கூட்டத்தின் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், 3வது ஊதிய மாற்றத்தின் தீர்வில் ஏற்பட்டுள்ள காலதாமதம் தொடர்பாக தங்களின் அதிருப்தியை தெரிவிக்கும் வகையில் மத்திய தொலை தொடர்பு அமைச்சர், திரு மனோஜ் சின்ஹா அவர்களுக்கு 17.01.2019 அன்று ஒரு கடிதம் எழுதப்பட்டது. இதில் சாதகமான முடிவு ஏற்படாவிட்டால் வேலை நிறுத்தத்தில் செல்ல வேண்டிய நிர்பந்தத்தில் AUAB உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. AUAB தலைவர்கள், மத்திய தொலை தொடர்பு அமைச்சரின் தனி செயலாளரிடம் நேரடியாக AUAB தலைவர்கள் இந்தக் கடிதத்தை வழங்கினர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநிலச் செயலாளர்.